# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1915 - 2015 මැයි මස 15 වැනි සිකුරාදා - 2015.05.15

*1915 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 656 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 660 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 664 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 657 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூன் மாதம் 05ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மே மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### *2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு*

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2015**

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2015.05.25 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கம்பஹா | கட்டான - நீர்கொழும்பு | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், இல. 150, கிருல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 | கட்டான நகருக்கு அருகாமையில் | 2015.06.01 |

***பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :***

அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மாணி மற்றும் மின்மாணி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுகோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல்" - (இடத்தின் பெயர்) எனக் குறிப்பிட்டு 2015.05.25 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05,
2015, ஏப்பிறல் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2015**

கட்டிட உரிமையாளர் தொடர்பாக-

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

கட்டிடம் தொடர்பாக-

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கையும் :----.
6. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
7. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
8. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/ .................... ) :----.
9. நிறுத்திவைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.
10. பிரதான வீதிக்குச் செல்வதற்கு எடுக்கும் நேர அளவு ? :----.
11. நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதா ? விபரம் தரவும் :----.
12. தொலைபேசி வசதி இருப்பின், தொலைபேசி இலக்கம் :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

5-347

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2015 - பல்லே வரதொல இலக்கம் 1

மேற்குறிப்பிடப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையை 2015, யூன் மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2015, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் புளித்த கள்ளினைச் சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள பொது விதிமுறைகளுக்கு அமைவாகவும், கீழ்க்குறிப்பிட்ட விதிகளுக்கு அமைவாகவும் 2015, மே மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் நாட்டில் உள்ள எந்தப் பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரித்து கீழ்க்குறிப்பிட்ட நிரந்தர வைப்புப் பணத்தைச் செலுத்தி பெறப்பட்ட பற்றுசீட்டுடன் இணைத்து கடித உறையின் இடது மேல் மூலையில் மேற்படி கேள்விப்பத்திரம் வழங்கும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப்பிரதேச செயலகத்தில் வைத்திருக்கும் கேள்விப்பெட்டியில் அல்லது படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரக்காரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்களில் ஏற்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களுக்கும் கேள்விப்பத்திரக்காரர்கள் தனது கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் தினமான 2015, மே மாதம் 29 ஆந் திகதி கேள்விப்பத்திரக்காரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவது 2015, மே மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.30 மணியுடன் முடிவடையும். எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாது கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர்கள் "எவர்" என அறிந்தவுடன் அன்றைய தினத்தில் மு. ப. 12.00 மணிக்கு முன்பாக அக்கேள்விப்பத்திரக்காரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்கு குறைவானதாகக் கணிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். அத்தோடு "குத்தகை நிபந்தனையில்" கையொப்பம் இடல் வேண்டும். மேலதிக விபரங்கள் படல்கும்புர பிரதேச செயலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2015, மே மாதம் 29 ஆந் திகதி கேள்விப்பத்திரங்கள் விற்க முடியாவிடின் 2015, யூன் மாதம் 5 ஆந் திகதி மீண்டும் விற்கப்படும்.

கசுன் எச். கே. வெல்லஹேவா,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
2015, ஏப்பிறல் 24.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறக்கும் நேரமும் மூடும் நேரமும் | வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லேவராதொல கமேவெல | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணிவரை பி. ப. 4.00 மணி முதல் பி. ப. 8.00 மணிவரை | 500 | 2015, மே மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

5-258

---

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வடக்கு வாகரை கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை** (2015, யூலை 1 - 2016, யூன் 30)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கமுடைய 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டு கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வடக்கு வாகரை கள்ளுத் தவறணைக்கான 2015, யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2016, யூன் மாதம் 30 ஆந் திகதிவரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிட்ட திகதி, நேரம் வரை கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (1,500 ரூபா) பணத்தை கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2015.06.08 ஆந் திகதி முதல் 2015.06.22 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது, கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% த்திற்குக் குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

3. கேள்விப்பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு கட்டிய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பிச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவுசெய்யப்பட்ட தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்துகொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(செல்வி) எஸ். ஆர். ராகுலநாயகி,
பிரதேச செயலாளர்.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகம்,
வாகரை,
2015, ஏப்பிறல் 20.

**அட்டவணை**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும்/நேரமும் திகதி | நேரம் |
|---|---|---|---|
| வாகரை வடக்கு கிராம அலுவலர் பிரிவு | ரீரீ இல. 5 | 22.06.2015 | பி. ப. 3.00 மணி |

**குறிப்பு :**

(1) கேள்விச்சபை 2015.06.22 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு கூடும்.

(2) விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறுவிற்பனை 2015.06.26 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

5-259

---

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவு கள்ளுத்தவறணைக்கான குத்தகை விற்பனை 2015 யூலை- 2016 யூன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கமுடைய 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி கள்ளுத்தவறணைக்கான 2015, யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2016, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபை கூட்டத்திற்கு சமுகம் அளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 1,500) பணத்தை ஆரையம்பதி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2015.05.11 ஆந் திகதி முதல் 2015.05.22 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % த்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதி சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

4.கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்று நிரூபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்)

7. ஏனைய விபரங்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. வ. வாசுதேவன்,
பிரதேச செயலாளர்.
மண்முனைப்பற்று.

பிரதேச செயலகம்,
மண்முனைப்பற்று,
ஆரையம்பதி,
மட்டக்களப்பு,
2015, ஏப்பிறல் 21.

**கள்ளுத்தவறணை அமைய வேண்டிய இடம்**

| கள்ளுத் தவறணைக்குரிய பிரதேச செயலகப் பிரிவு | தவறணை அமையவேண்டிய இடம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் /நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மண்முனைப்பற்று | ஆரையம்பதி தெற்கு கிராம அலுவலர் பிரிவு | 2015.05.25 | மு. ப 9.00 மணி |

**குறிப்பு**:

1. கேள்விச் சபை 2015.05.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்குக் கூடும்.

2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறுவிற்பனை 2015.06.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

5-260

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) இன்கீழ் அறிவித்தல்**

ப்ரய்ம் க்ராமீன் கட்டடம், இல. 168, நாவலை வீதி, நுகேகொடை என்ற முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையுடைய ப்ரய்ம் க்ராமீன் மைக்ரோ பினான்ஸ் லிமிடட்டெட் அதன் குறிப்பிடப்பட்ட மூலதனத்தை (ரூ. 389,58,06,240) முன்னூற்றெண்பத்தொன்பது கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து ஆறாயிரத்திருநூற்றுநாற்பது ரூபாவிலிருந்து (ரூ. 22,35,45,481) இருபத்திரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து நாற்பத்தையாயிரத்து நானூற்றெண்பத்தொரு ரூபாவாக குறைப்பதற்கு உத்தேசித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் இத்தால் பகிரங்க அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஷிரோமி ஹல்லோலுவ,
செயலாளர்.

ப்ரய்ம் க்ராமீன் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்.

5-386

---

**அறிவித்தல்**

ஏ. வை. கே. ஹோல்டிங்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைப்பு தொடர்பாக பின்வருமாறு அறிவிக்கப் படுகின்றது :-

ஏ. வை. கே. ஹோல்டிங்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனி ஒன்றை 2015, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன் கம்பனி பதிவு இல. பீவீ 105172 எனவும், அதன் பதிவலுவலகம் இல. 28 (2 ஆம் மாடி), டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரியில் அமைந்துள்ளது என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

எம். அன்ட் ஏ. கம்பனி செக்கரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 28 (2 ஆம் மாடி),
டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02.

5-385

---

**அறிவித்தல்**

கிப்ட் ஒப் லைப் ஸ்ரீலங்கா

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைப்பு தொடர்பாக பின்வருமாறு அறிவிக்கப் படுகின்றது :-

கிப்ட் ஒப் லைப் ஸ்ரீலங்கா என்ற பெயரில் (வரையறுக்கப்பட்ட கரண்டி) புதிய கம்பனி ஒன்றை 2015, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன் கம்பனி பதிவு இல. ஜீஏ 3026 எனவும், அதன் பதிவலுவலகம் இல. 28 (2 ஆம் மாடி), டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரியில் அமைந்துள்ளது என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

எம். அன்ட் ஏ. கம்பனி செக்கரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 28 (2 ஆம் மாடி),
டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02.

5-384

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சன்ரேசியா (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைத்தல் திகதி : 07.04.2015
கம்பனி இலக்கம் : பீவீ 104907
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 67/ 1, ஹட்சன் வீதி, கொழும்பு 3

கம்பனிச் செயலாளர்.

5-397

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2013.09.12 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பின்னகல் கோமடடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 94509
பதிவு முகவரி : இல. 1411, ருப்பாகொட மாவத்தை, கோனஹேன, கடவத்தை

பின்னகல் கோமடடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

5-371

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சிலோன் கொபி கோபரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, மாச்சு 19
கம்பனியின் இலக்கம் : பீவீ 104557
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 2, அடம்ஸ் அவெனியூ, கொழும்பு 4

எக்கவுண்ட்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

இல. 67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

5-348

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சென்பதி கொன்கிறீட் மார்க்கெட்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 104970
பதிவு முகவரி : இல. 208, கஹட்டபிட்டிய, கணன்வில, ஹொரண

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. மத்துமகே செனவிரத்ன,
பணிப்பாளர்.

5-331

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹொரைசன் ப்ரோக்ரஸ்சிவ் CO. W. L. L. 1 ஆம் மாடி, அறை இல. 11, அல் மிர்காப் தொகுதி, அல் நாசர், தபால் பெட்டி இல. 63325, தோஹா-கட்டார் மற்றும் தற்பொழுது பன்னிப்பிட்டிய, ஹிரிபிட்டிய, இல. 59/7, எனும் முகவரியில் வசிக்கும் மதாவ கொஹிலேகெதர சிசிர தர்மதிலக்க அல்லது குடமுலாச்சாரிகே சிசிர தர்மதிலக்க ஆகிய நான், பன்னிப்பிட்டிய, மாக்கும்புர, டி. டி. குலதுங்க மாவத்தை, இல. 450/4 எனும் முகவரியில் வசிக்கும் மஹேந்திர பிரசாத் வனகுரு என்பவருக்கு தூதரக அதிகாரி, இலங்கைத் தூதரகம், தோஹா-கட்டாரில் 2014.03.10 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச் செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் வழங்குகிறேன்.

மதாவ கொஹிலேகெதர சிசிர தர்மதிலக்க
அல்லது குடமுலாச்சாரிகே சிசிர தர்மதிலக்க.

5-395

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2015.03.27 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பெஸ்ட் ட்ரீம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 104601
பதிவு முகவரி : இல. 47, அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 47, அலெக்ஸான்றா பிளேஸ்,
கொழும்பு 7.

5-314

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எகொலெக்ஸ் ஒட்டோமோட்டிவ் அன்ட் என் ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 103511
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, சனவரி 30
*பதிவு முகவரி* : இல. 141/3, வொக்சோல் வீதி, கொழும்பு 2

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-318

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : அல் அக்சா வேர்ல்வைட் சொலுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 103954
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, பெப்புருவரி 19
*பதிவு முகவரி* : இல. 16/1, கொஸ்வத்த வீதி, கொஸ்வத்தை, ராஜகிரிய

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-319

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு, சட்டத்தரணி மற்றும் பிரசித்திபெற்ற நொத்தாரிசு சேனாதீர ஹேவகே குணபால விக்ரமரத்ன என்பவரால் 2015, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய 11 ஆம் இலக்கத்தின்கீழ் கொழும்பு 6, கிருலப்பனை, கிருலபுர, வரிப்பண இலக்கம் 60/13 இல் வசிக்கும் திசாநாயக்க முதியன்சேலாகே மத்தும மெனிக்கா (தே. ஆ. அ. அ. இலக்கம் 395870238V) என்பவரால் இம்புலுபிட்டியவத்த, நாவலப்பிட்டிய எனும் விலாசத்தில் வசிக்கும் நெல்சன் பெர்னாந்து (தே. ஆ. அ. அ. இலக்கம் 761081500V) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணி தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சகலருக்கும் இத்தால் அறியத்தரப் படுகின்றது.

திசாநாயக்க முதியன்சேலாகே மத்தும மெனிக்கா.

5-286

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டிறீம் ஷேப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 103513
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, சனவரி 27
*பதிவு முகவரி* : கடை இல. 54, 2 ஆவது மாடி, வெலிக்கட பிளாசா, இராஜகிரிய

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-320

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சிங்ஹ ஹெவி இக்விப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 100332
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.08.21
*பதிவு முகவரி* : லெவல் 34, கிழக்கு மாடம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-321

**பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : என் பீ டபிள்யூ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 75743
*பெயர் மாற்றம் செய்த திகதி* : 2014.11.20
*கம்பனியின் புதிய பெயர்* : நொபாவொங் கன்ஸ்ரக்ஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி முகவரி* : இல. 217, ஸ்டேன்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-322

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சீ பூட் ஹவுஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 103996
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.02.23
*பதிவு முகவரி* : இல. 629, கீனாகெலே எஸ்ட்டேட், முடகட்டுவ, மாறவில

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-323

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கென் ஐ (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 100607
*கூட்டிணைப்புத் திகதி* : 01.09.2014
*பதிவு முகவரி* : இல. 141/3, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-324

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஸ்பெக்டா சொலுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 101454
*கூட்டிணைப்புத் திகதி* : 13.10.2014
*பதிவு முகவரி* : இல. 1ஏ, 2/1, டுப்ளிகேஷன் வீதி, கொழும்பு 5

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-325

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எமர்பஸ் ஏஷியா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 100080
*கூட்டிணைப்புத் திகதி* : 05.08.2014
*பதிவு முகவரி* : இல. 10, நாரஹேன்பிட்டி வீதி, நாவல

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-326

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஒஸ்டிரேலியன் புறோப்பர்டி கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம் : பீவீ 103585*
*கூட்டிணைப்புத் திகதி : 29.01.2015*
*பதிவு முகவரி* : இல. *48/1*, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5

*சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,*
*கம்பனிச் செயலாளர்கள்.*

இல. *141/3*, வொக்ஷோல் வீதி,
கொழும்பு *2.*

*5-327*

---

# ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வர்தன வங்கி**
(முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

***1369 மற்றும் 1583 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

***கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 1 ஆம் வட்டாரம், சின்னக் கிண்ணியாவில் அமைந்துள்ள இல. 27, மட்டக்களப்பு வீதி, கிண்ணியா 1 என்ற முகவரியைக் கொண்ட 'கிண்ணியா தோட்டம்' என அழைக்கப்படும் திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளரும் மட்டமிடுவோருமான ஆர். பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2008 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 1 ஆந் திகதியிடப்பட்ட 1342 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட காணித் துண்டும் அதனுடன் இணைந்த பகுதிகளும்.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 14.11பே.)***

***மேற்கூறப்பட்ட காணி கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 1 ஆம் வட்டாரம், சின்னக் கிண்ணியாவில் அமைந்துள்ள இல. 27, மட்டக்களப்பு வீதி, கிண்ணியா 1 என்ற முகவரியைக் கொண்ட காணித்துண்டாகும். உத்தரவுபெற்ற நிலஅளவையாளரும் மட்டமிடுவோருமான எம். ஏ. மொஹமட் அன்வர் அவர்களால் வரையப்பட்ட 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 633 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ என மீள் அளவை செய்யப்பட்ட, அடகு வைக்கப்பட்ட காணித்துண்டு, அதற்கு உரித்தான அனைத்து உரிமைகளும் அடங்கலாக.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 0பே.)***

*(திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு ரீ. துஷ்யந்தன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட 1369 ஆம் இலக்க பிணை உறுதி மற்றும் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட 1583 ஆம் இலக்க பிணை உறுதி ஆகியன மூலம் கிண்ணியாவில் வசிக்கும் அப்துல் ஹமீட் மொஹமட் பாயிஸ் அவர்களால் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ (முன்னர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்டது) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி *2015* ஆம் ஆண்டு யூன் மாதம் *04* ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. *11.00* மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், ஏல விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு *2.5%* (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு *1,22,000* ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் *2,000* ரூபா.

கொள்முதல் விலையின் மீதி *90%* விற்பனையின் பின்னர் *30* நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** *011-2442442* என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

5-368

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – மாத்தளை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட திருகோணமலை வீதி தற்போது டீ. எஸ். சேனாநாயக்க வீதியில் திரித்துவ கல்லூரிக்கு முன்னால் அமைந்துள்ள மூன்று மாடி வியாபாரக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும்.**

***(பரப்பளவு : 1.7 பேர்ச்)***

*(இவ்வாதனம் கார்தி ஹேவகே மஹேஷ் விஜேசேக்கர கார்திகே மஹேஷ் விஜேசேக்கர என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- இவ்வாதனம் டீ. எஸ். சேனாநாயக்க வீதியில் திரித்துவக் கல்லூரிக்கு (Trinity College) முன்னால் மற்றும் மயான பாதையின் எல்லையில் அமைந்துள்ளது. (வரிப்பண இல. 251 (முன்னர் வரிப்பண இல. 262).

இவ்வாதனம் 2015.06.04 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2015.04.17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2015.04.20 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- ஏல விற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90 வீதமும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- பதில் பொது முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661815, 011-2661816.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 077-7761706.
தொலைநகல் இல. : 081-2210595.

5-374

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிறவட்சுக்கள் மற்றும் மாநகரசபை எல்லைகளுக்குள் தங்கெதரவையில் அமைந்துள்ளதும் கிறீப்ஸ் வீதி, வரிமதிப்பு இல. 47 ஐக் கொண்டதும் "மொல்லேகெதர கேவத்தை" என்ற "தொலமுல்லேவத்தை" என்ற "கல்வெட்டியே வத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. பீபீ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1958, செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1468 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1சீ என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள "குசுமாலா" என அழைக்கப்படும் வீடு மற்றும் வளவுடனும் சேர்த்து ஏல விற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 27.50பே.)***

*(கடப்பாடுடையவரான திருவாளர்கள் உப்புலி ஓவ்செட் பிரின்டர்ஸ் (பீவீரீ) லிமிட்டெட் மற்றும் ஈடுவைத்தவரான புவக்தந்தாவே லொக்கு ஆச்சாரிகே சோமபால ஆகியோர், நொத்தாரிசு என். ஆர். ஹேவா தந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2010, யூலை 7 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1965 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

**ஆதனத்தைச் சென்றடையும் வழி**.- காலி நகரிலிருந்து கீழ் டிக்ஷன் வீதி வழியே சென்று 'T' சந்திவரை சென்று, கிறீப்ஸ் வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, வலப்பக்கத்திலுள்ள இவ்வாதனத்தை அடைவதற்கு ஏறக்குறைய 40 மீற்றர் செல்லவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை முறையே 2015, யூன் 4 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு***.- *2015, பெப்புருவரி 13 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய "டெய்லி நியூஸ்" "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
5. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா ;
6. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணம் ;

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டுவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல.450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., முகாமையாளர்-அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667227, 011-2565573.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பிடுநர் மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 182/3, (50/3), விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. 011-3068185, 071-4177199.
தொலைநகல் இலக்கங்கள் : 011-2572940, 011-2871184.

5-390

---

## நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ

ஏல விற்பனை

**வடமத்திய மாகாணம், பொலன்நறுவை மாவட்டம், மின்னேரிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹிங்குராக்கொடை நகர மத்தியில் ஹிங்குரக்கொடை பஸார் எனும் காணி நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட அவரது பொறுப்பிலுள்ள வரைபட இல. 2 I. S. P. 07 எனும் மேலதிக லொட் 422 எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பி. இலங்கசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2012/PO/102 இல் குறிக்கப்பட்ட லொட் 1 எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள் அடங்கும் பிரதான பாதை இரண்டு மாடி வியாபாரக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். (மேற்கூறிய சொத்தில் கடப்பாடுடையவர்களுக்கு சொந்தமான சகல வரி உரிமைகளும் அதிகாரங்களுக்குட்பட்டதாக).**

**(பரப்பளவு : 2.70பேர்ச்)**

*(இவ்வாதனம் ஹிங்குரக்கொடை, பொலன்நறுவையில் தனது பதிவு அலுவலகத்தை நடாத்திச் செல்லும், வியாபார பெயர்ப்பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள சமன் ஷூ பெலஸ் எனும் பெயர் மகுடத்தின்கீழ் பங்கு வியாபாரம் ஒன்றை நடத்திச் செல்லும் தெலத பிரகீத் இந்திரஜித் த சொய்சா மற்றும் பிரன்சிஸ்கு பதுகே பந்துவதி விமலசேக்கர ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கியினால் பெறப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்**.- ஹிங்குரக்கொடை, நகர மத்தியிலிருந்து பிரதான பாதையில் சுமார் 75 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனத்தை அடையலாம்.

இவ்வாதனம் 2015, யூன் 01 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு***.- *2015.02.13 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2015.02.09 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏல விற்பனையாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ; (2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ; (3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ; (4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ; (5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ; (6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப் படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- *சிரேஷ்ட முகாமையாளர் (சட்டம்), நெஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2. தொலைபேசி இல. : 011-2448448.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல பாதை, மாவில்மட,*
*கண்டி.*
*தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.*

*5-375*